உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 18.06.2026 • மலர் 04 • இதழ்: 169 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 18.06.2026 • Vol : 04 • Issue : 169 • Page : 4 • Rs. 5/-

## பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் டிரம்ப் சந்திப்பு

# ஆலோசிக்கப் போவது என்ன?

பிரான்ஸ், ஜூன் 18

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இன்று சந்தித்து பேச உள்ளனர். இந்த சந்திப்பில், இந்தியா அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை விரைவாக இறுதி செய்வது, பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் முக்கிய கனிம வளத் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட அம்சங்கள் முக்கியமாக இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரு நாடுகளின் உறவுகளில் சமீபகாலமாக ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் இந்த விரிவான ஆலோசனை நடைபெற உள்ளது. முன்னதாக, ஜி7 மாநாட்டு தலைவர்களின் சந்திப்பில் மோடி மற்றும்டிரம்ப்மரியாதை நிமித்தமாக சந்தித்து சுருக்கமாக உரையாடினர். கடந்த 16 மாதங்களில் இருவரும் நேரில் சந்தித்த முதல் நிகழ்வு இதுவாகும்.

இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா கூடுதல் சுங்க வரி விதித்ததும், இந்தியா பாகிஸ்தான் ராணுவ மோதலைதலையிட்டு நானே முடிவுக்கு கொண்டு வந்ததாக டிரம்ப் கூறியதும் இருதரப்பு உறவில் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்தியா பாகிஸ்தான் இடையிலான மோதல் நிறுத்தம் இரு நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையின் விளைவாகவே ஏற்பட்டது என்றும், அதில் அமெரிக்காவுக்கு எந்த பங்கும் இல்லை என்றும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்திவருகிறது. மேலும், அமெரிக்காவின் புதிய குடியேற்றக் கொள்கை மற்றும் எச்1பி விசா கட்டண உயர்வும் இரு நாட்டு உறவில் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, கடந்த சில மாதங்களாக இருதரப்பும் உறவுகளை சீரமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இருதரப்புக்கும் பயனளிக்கும் வகையிலான வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வந்தன. ஆனால், ஓமன் கடல் பகுதியில் அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் உயிரிழந்த சம்பவம் கடந்த வாரம் இருநாட்டு உறவில் புதிய சிக்கலை ஏற்படுத்தியது. ஈரான் துறைமுகங்களுக்கு விதித்திருந்த கடல் முற்றுகையை மீற முயன்றதாக கூறி மூன்று வர்த்தகக் கப்பல்களை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதில் இந்த துரதிர்ஷ்ட சம்பவம் நடைபெற்றது.

இந்த சம்பவத்துக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், அமெரிக்க தூதரகத்தின் பொறுப்பு அதிகாரி ஜேசன் மீக்ஸை அழைத்து விளக்கம் கேட்டது. இந்திய மாலுமிகள் பணியாற்றிய கப்பல்கள் மீது நடத்தப்பட்ட உயிரிழப்பை ஏற்படுத்திய தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் இந்தியா தெரிவித்தது. இந்த விவகாரத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் மார்கோ ரூபியோவிடம் எழுப்பியிருந்தார். இத்தகைய பரபரப்புக்கு மத்தியில்தான், மோடி டிரம்ப் சந்திப்பு இன்று நடைபெற உள்ளது.

இந்தியா சிறப்பு அழைப்பு நாடாக பங்கேற்றுள்ள ஜி7 மாநாட்டில் உலகின் முன்னணி பொருளாதார நாடுகளான கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. ஐரோப்பிய ஒன்றியமும் இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ளது. உலகளாவிய பொருளாதாரம், நிதி மற்றும் புவிசார் அரசியல் சவால்கள் குறித்து விவாதித்து, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முக்கிய தளமாக ஜி7 அமைப்பு செயல்பட்டு வருகிறது.




## போக்குவரத்து விதிமுறைகளை மீறி

# அதிக ஒளி மாசு ஏற்படுத்தி வந்த வாகனங்களின் விளக்குகளை அகற்றி அபராதம் விதித்து நடவடிக்கை எடுத்த போக்குவரத்து போலீசார்

நாகர்கோவில் ஜூன் 18

குமரி மாவட்டத்தில்அளவுக்கு அதிகமாக ஒளி வீசும் ஒளி விளக்குகள் பொருத்தி வரும் வாகனங்களால் ஒளி மாசு அடைவதுடன் எதிர்வரும் வாகன ஓட்டிகள் பெரும் இன்னலுக்கு உள்ளாகி வருவதுடன் விபத்துகளும் ஏற்படுகிறது. எனவே இதனை முற்றிலுமாக தடை செய்யும் விதமாக குமரி மாவ ட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் மாவட்டம் முழுவதும் வாகனங்களில் அனுமதிக்க ப்பட்ட ஒளிரும் விளக்குகளை தவிர வாகன உரிமையாளராலும் ஓட்டுனரா லும் அதிக ஒளிக்காகவும், அழகுக்கா கவும் பொருத்தப்பட்டுள்ள அதிக ஒளி வீசும் விளக்குகளை பொருத்தி வரும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் அந்த விளக்குகளை அகற்றவும் உத்தரவிட்டிருந்தார். அவரின் உத்தரவின் பெயரிலும் கன்னியாகுமரி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் ஜெயச்சந்திரன் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து ஒழுங்கு பிரிவு காவல் துறை உதவி ஆய்வாளர் சுமித் ஆட்ரின் மற்றும் காவலர்கள் சுசீந்திரம் ஆசிரம பகுதியில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அளவுக்கு அதிகமாக ஒளி வீசும் ஒளி விளக்குகள் மாட்டி வரப்பட்ட வாகனங்கள் சோதனை செய்து அளவுக்கு அதிகமாக வைக்கப்பட்ட விளக்குகள்அனைத்தும்நீக்கப்பட்டன. தற்போது உள்ள காலகட்டங்களில் உள்ள வாகனங்கள் அதிகப்படியான ஒளி உமிளும் விளக்குகளை முகப்பு விளக்குகள் பயன்படுத்துவதால் ஒளி மாசுபாடு ஏற்படுகிறது இதனால் எதிரில் வரும் இருசக்கர வாகன ஓட்டிகள் பாதசாரிகள் போன்றவருக்கு போதுமான அளவு சாலை பார்வை கிடைப்பதில்லை மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் ஜீரோ ஆக்ஸிடெண்ட் எனும் திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் கன்னியாகுமரி போக்குவரத்து காவலர்கள் இத்தகைய வாகன சோதனைகளில் ஈடுபட்டு அளவுக்கு அதிகமான ஒளி உமிழும் ஒளி விளக்குகளை வாகனங்களில் இருந்து அகற்றியும் அபராதம் விதித்தும் நடவடிக்கை எடுத்தும் வருவது குறிப்பிடத்தக்கது.







தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக A.K. அருண் கபிலன் ஐபிஎஸ்., பொறுப்பேற்றுக் கொண்டார்.

# தஞ்சாவூரில் முன்னாள் படை வீரர்களுக்கு அண்ணா சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம்

## கலெக்டர் ரேவதி தலைமையில் நடந்தது



தஞ்சாவூர் ஜூன் 18

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவ லக கூட்டரங்கில் முன்னாள் ப டை வீரர்களுக்கானசிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் முன்னாள் படை வீரர்கள் மற்றும் சார்ந்தேரர்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரி க்கைகள் அடங்கிய மனுக்களை அளித்தனர். மொத்தம் 30 மனுக்கள் பெறப்பட்டன. மேலும் முன்னாள் படை வீரர்கள் நலத் துறை சார்பில் 17 நபர்களுக்கு ரூபாய் 3, 51,000/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டன. இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர் கள் என 90 நபர்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் தஞ்சாவூர் மாவட்ட முன்னாள் படை வீரர் நல துணை இயக்குநர் லெப். கர்னல் . க.ஞானசேகர் (ஓய்வு), நல அமைப் பாளர் அ. ராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தேன்கனிக்கோட்டையில் யாரப் தர்கா கொடியேற்றி சந்தன குட திருவிழா



ஒசூர் ஜூன் 18

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் அவ்லியா அல்லாஹ் ஹஸ்ரத் யாரப் தர்காவில் சந்தன குட உருஸ் திருவிழாவின் தொடக்கமாக அலமேஷரிப் @ கொடியேற்று விழா சந்தன குட திருவிழா ஊர்வலம் கமிட்டித் தலைவர் முஜாமில் பாஷா தலைமையில் செயலாளர் மகபூப் கான் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் முதாசிர் பாஷா , தில்லு ஷரிப் , கலிம் பேக் ,சையத் அப்சல்,முகமது ஜாபர் ஷரிப்,சையத் பாசில்,சுபான் உல்லா,முகமதுசுல்தான்முன்னிலையில் சந்தன குட கொடியேற்று திருவிழா ஊர்வலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது பின்பு தர்காவில் சந்தன பூச்சு மற்றும் கொடியேற்றப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது .இந்த நிகழ்ச்சிக்கு தேன்கனிக்கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் ஆனந்த்ராஜ் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக பாதுகாப்பு வழங்கப்பட்டது. மேலும் தேன்கனிக்கோட்டை காவல் ஆய்வாளர் சாவித்திரி மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் நாகராஜ், சிற்றரசன்,கார்த்திக்,மற்றும் பலர் இந்த கொடியேற்று திருவிழாவிற்கு காவல்துறையினர் பாதுகாப்பு வழங்கினார்கள். இந்த நிகழ்வில் தமிழ்நாடு,ஆந்திரா,கர்நாடகா,மூன்று மாநிலங்களில் இருந்து பொதுமக்கள் இந்த கொடியேற்று விழா மற்றும் கொடியேற்று திருவிழா ஊர்வலத்தில் கலந்துக் கொண்டனர்.மேலும் வருகைப் புரிந்த பொது மக்களுக்கு யாரப் தர்கா சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துக் கொண்டு இந்த திருவிழாவை சிறப்பித்தனர்.மேலும் வருகிற ஜூலை மாதம் 11, 12, 13 தேதியில் யானையின் மீது சந்தன குட உருஸ் திருவிழா மிக பிரமாண்டமாக நடைபெற உள்ளது விழாவின் ஏற்பாடுகளை கமிட்டியினர் செய்து வருகினர்

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தருமபுரி ஜூன் 18

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டறங்கில் மக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டம்மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சாலை வசதி குடிநீர் வசதி, பேருந்து வசதி, முதியோர் உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா, பட்டா சிட்டா பெயர் மாற்றம் ஆகியவை வேண்டி பொதுமக்கள் ஆட்சியரிடம் மனு அளித்தனர். பொதுமக்களிடமிருந்துபெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காண வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் தலைமையில் போதைப்பொருள் தடுப்பு ஆய்வு கூட்டம்



ஈரோடு ஜூன் 18

ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் போதைப் பொருள் தடுப்பு ஆய்வு கூட்டம் கலெக்டர் கந்தசாமி தலைமையில் நடந்தது. இதில் கல்லூரிகளின் போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கொரியர் சேவை நிறுவன உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது கல்லூரி போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாணவ, மாணவியர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும்,

கல்லூரிகளில் அவ்வப்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். மேலும், கல்லூரி நிர்வாகங்கள் தங்களது பணியாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மூலம் மாணவர்கள் போதைப்பொருட்களை பயன்படுத்தாத வகையில் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். போதைப்பொருள் தடுப்பு அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் ஈரோடு மாவட்டத்தை போதைப்பொருட்கள் இல்லா மாவட்டமாக உருவாக்கி, மாநில அளவில் முன்னோடி மாவட்டமாக திகழச் செய்வதற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் .

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உதவி ஆணையர் (கலால்) தியாகராஜன் மற்றும், கல்லூரிகளின் போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் , கூரியர் நிறுவன உரிமையாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூரில்

# மணல் குவாரிகள் திறக்க வேண்டும் என தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் சம்மேளன மாநில தலைவர் இராசாமணி கோரிக்கை



திருப்பத்தூர்:ஜூன்:18

திருப்பத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் சம்மேளன கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டத்தில் அனுமதி இன்றி செயல்படும் சேமிப்பு கிடங்கினை உடனடியாக மூட வேண்டும் மேலும் கனிம சேமிப்பு கிடங்கிற்கு வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்ய வலியுறுத்தி பேசப்பட்டது. செய்தியாளர்கள் சந்திப்பின்போது மாநிலத் தலைவர் பேசுகையில், லாரிகளில் அதிக பாரங்களை ஏற்றக்கூடாது, ஏற்றப்படும் அளவிற்குண்டான நடை சீட்டு போடாமல் குறைத்துக்கொண்டு ஒரு லாரிக்கு போடப்பட்ட நடை சீட்டை மூன்று லாரிகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். M send முறைகேடாக இருப்பு வைத்துக்கொண்டு இரண்டாம் விற்பனையை செய்து அரசிற்கு இழப்பு ஏற்படுத்துகின்றனர். லாரியில் அதிக பாரம் ஏற்றுவதுடன் உரிமையாளர்களிடம் மணம் பெற்றுக்கொண்டு லாரி உரிமையாளர்களின் விருப்பத்திற்கு மாறாக செயல்படுகின்றனர். லாரிகளில் லோடு ஏற்றும்போது தரச்சான்றிதழ் நகல், பகுப்பாய்வு நகல் வழங்க வேண்டும் ஆனால் வழங்கப்படுவதில்லை. GST பில் நடைசீட்டு கொடுக்காமல் டெலிவரி செலானுடன் லோடு எடுத்துச் செல்லும் வாகனங்களை வழியில் நிறுத்தி காவல் துறையினர், கனிம வளத்துறையினர் வாகன சோதனை செய்து ஜிஎஸ்டி பில் மற்றும் மற்றும் நடை சீட்டு இல்லாமல் அதிக பாரம் ஏற்றும் கனிமங்களை திருடி செல்வதாகவும் லாரி உரிமையாளர்கள் ஓட்டுநர்கள் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்து வருகிறார்கள் என பல்வேறு குறைபாடுகளை கூறி, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள டிப்பர் லாரி உரிமையாளர்கள் நலச்சங்கத்தின் சார்பில் கோரிக்கைகளை முன்வைத்தனர். இக்கூட்டத்தில் மாவட்டத் தலைவர் செல்ல பாண்டியன், மாவட்ட செயலாளர் திருமலை, பொருளாளர் சஞ்சய் குமார், துணைத் தலைவர் சதீஷ்குமார், மாவட்ட துணை செயலாளர் ஆனந்த பிரபு, துணைப் பொருளாளர் சக்கரவர்த்தி, தங்க அமைப்பாளர் செல்வநாதன், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### ஆச்சிபட்டி ஊராட்சி த.வெ.க சார்பில்

# பொதுமக்களுக்கு பட்டா வழங்க சார் ஆட்சியரிடம் கோரிக்கை



கோவை ஜூன் 18

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது மக்களுக்கான ஜமாபந்தி நடைபெற்றது. ஆச்சிபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஜேஜே காலனி பொதுமக்கள் சார்பில் த.வெ.க நிர்வாகிகள் சார ஆட்சியரிடம் மனு வழங்கினர். இதுகுறித்து பொதுமக்கள் கூறியதாவது: கடந்த 25 வருடங்களாக இந்த ஆச்சிபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஜே ஜே காலனியில் சுமார் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறோம். எங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது.

அதில் வரைபடம் எடுத்து பார்த்ததில் கல்லுக்குழி என்ற பெயரில் பட்டா உள்ளது எங்கள் பட்டாவிற்கு வீடு கட்டுவதற்கான வங்கி கடன் மற்றும் எந்த ஊரு தேவையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளது. ஆகவே எங்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலமாக மாற்றித் தருமாறு என்று பொதுமக்கள் சார்பில் த.வெ.க நிர்வாகிகள் முருகேசன் முத்து லட்சுமி, வெங்கடாசலம், சரஸ்வதி, அருள் ஹரிஹரன் ஆகியோருடன் இணைந்து மனு அளிக்கப்பட்டது.

# திருச்சி வாகன விபத்து காவல் உதவி ஆய்வாளர் உயிரிழப்பு



திருச்சி, ஜூன் 18

திருச்சி துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்த தட்சிணாமூர்த்தி, மருத்துவ விடுப்பில் இருந்தபோது, தனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் திரும்பும் வழியில், எதிரே வந்த வாகனம் மோதி உயிரிழந்தார். இந்தவிபத்து குறித்து துவாக்குடி காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



### வளநாடு அருகே

# தீப்பற்றி எரிந்த வீடு

திருச்சி, ஜூன் 18

திருச்சி மாவட்டம் வளநாடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆண்டியப்பட்டி கிராமத்தில் மலையாண்டி என்பவர் தனது தோட்டத்தில் குடிசை வீடு அமைத்து குடும்பத்துடன் வசித்து வருகிறார். இன்று காலை 11 மணியளவில் அனைவரும் தோட்டத்திற்கு வேலைக்கு சென்றிருந்தபோது, அவர்களது குடிசை வீடு திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் ஒரு மோட்டார் சைக்கிள், இரண்டு சைக்கிள்கள், 12 ஆயிரம் ரொக்கம், வீட்டு ஆவணங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் என லட்சக்கணக்கில் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. குடும்பத்தினர் அதிர்ச்சி யடைந்துள்ள னர்.



### களியக்காவிளை பேரூராட்சி பகுதியில்

# தெரு நாய்களை கருத்தடை மையத்தில் ஒப்படைப்பு

களியக்காவிளை, ஜூன்.18

தமிழ்நாடு முழுவதும் தெரு நாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்த மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள் சார்பில் நாய்களைப் பிடிக்கும் பணி மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் களியக்காவிளை பேரூராட்சிக்கு உட்பட்ட படந்தாலுமூடு, மீனச்சல் பகுதிகளில் தெருநாய் தொல்லை அதிகரித்து வருவதாக புகார் எழுந்தது. இந்த நிலையில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் இருந்து பேரூராட்சி ஊழியர்களின் உதவியுடன் தெரு நாய்களை பிடிக்கும் பணி நேற்று நடைபெற்றது. பிடித்த நாய்களை குழித்துறை பகுதியில் உள்ள கருத்தடை மையத்தில் பேரூராட்சி வாகனம் மூலம் கொண்டு சென்றனர்.

தொடர்ந்து அவற்றிற்கு வெறிநோய் தடுப்பூசி மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து, 3 நாட்கள் கண்காணித்த பிறகு அதே இடத்தில் திரும்ப கொண்டு விடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மார்த்தாண்டத்தில் வரும் 21ம் தேதி நடக்கிறது

# அரசு வேலைக்கான மாபெரும் கருத்தரங்கம்



களியக்காவிளை, ஜூன். 18

மார்த்தாண்டத்தில் திரயம்பகம் ஐ. ஏ. எஸ். அக்காடமி கடந்த சுமார் 3. வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இந்த அக்காடமி சார்பில் பள்ளி, கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மத்திய மாநில அரசுகள் நடத்தும் போட்டி தேர்வினை எழுதுவதற்கான வழிகாட்டி மையமாக செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாணவ மாணவியரும் ஒரு அரசு வேலை யில் சேர வேண்டும் என்பது இந்த நிறுவனத்தின் நோக்கம் ஆகும்.

இந்த நிலையில் அரசு வேலை வாய்ப்பு பெறுவதற்கான மாபெரும் கருத்தரங்கம் மார்த்தாண்டம் மாநகரில் தனியார் மண்டபத்தில் ஜுன் 21ம் தேதி நடக்கிறது. இதில் திரெயம்பகம் அக்காடமியின் நிறுவன தலைவர் செந்தில் முருகன் தலைமை வகிக்கிறார். தமிழக வருவாய் துறை ஆணையர் கவிதர ராமானுஜம் பங்கேற்று கருத்தரங்கை நடத்துகிறார். காலை 10 மணிக்கு கருத்தரங்கம் துவங்குகிறது. அரசு வேலையில் சேர்வதற்கு இந்த இலவச வழிகாட்டி முகாமில் மாணவர்கள் பங்கேற்று பயன் பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### விளாத்திகுளம் அருகே

# நியாய விலை கடை திறப்பு விழாவில் தரமற்ற ரேஷன் அரிசி வழங்குவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு



விளாத்திகுளம் ஜூன் 18

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வவ்வால் தொத்தி, சின்ன வ நா ய க் கன் ப ட் டி ம னி ய க் கா ரன் பட்டி, சின்னையாபுரம், நூத்தலக்கரை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட அங்கன்வாடி, நியாயவிலை கடை, சமுதாய நலக்கூடம், உள்ளிட்ட அரசுகட்டிட திறப்பு விழா நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன், சின்னவநாயக்கன்பட்டி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையை திறக்க வந்த போது, கிராமத்தைச்சேர்ந்த மக்கள் சின்னவநாயக்கன்பட்டி கிராமத்திற்கு ரேஷன் கடையில் கருப்பு நிறத்திலும், தூசி துப்பட்டையுமாக தரமற்ற முறையில் அரிசி இருப்பதாகவும், இது சாப்பாட்டுக்கு உகந்ததல்ல, நியாய விலை கடையில் உள்ள அரிசிகளை மொத்தமாக மாற்ற வேண்டும் என்று விளாத்திகுளம் திமுக சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேனிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து நியாய விலைக்கடையில் உள்ள அரிசிகளை ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர், நியாய விலை கடையில் இருந்தவரே செல்போனில் மாவட்ட வட்ட வழங்கல் அலுவலரிடம், சின்னவநாயக்கன்பட்டி கிராம நியாயவிலைக் கடைக்கு வாயில் வைக்க முடியாத அளவிற்கு மிகவும் தரமாற்ற முறையில் அரிசி அனுப்பப்பட்டு உள்ளதாகவும், விளாத்திகுளம் தொகுதி முழுவதும் இப்படி தரமற்ற அரிசியை நீங்கள் அனுப்புவதாகவும், இந்த அரிசிகளை உடனே திரும்ப பெற்று தரமான முறையில் அரிசி வழங்க வேண்டும், இல்லையெனில் நான் வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் விளாத்திகுளம் தொகுதிக்கு தரமற்ற அரிசி வழங்குவதாக பேசுவேன் என விளாத்திகுளம் திமுக சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டையன் அதிகாரியை லெப்ட் ரைட் வாங்கி கடிந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் திமுக மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ் உட்பட திமுக கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



### திற்பரப்பில்

# சித்த வர்ம மருத்துவர்கள் கூட்டமைப்பின் 1 வருட வர்ம பயிற்சி நிறைவு விழா

களியக்காவிளை, ஜூன்.18

பாரம்பரிய சித்தவர்ம ஹீலர்ஸ் அசோசியேஷன் சார்பில் ஒரு வருட வர்ம பயிற்சி திற்பரப்பில் நடந்தது. இந்த பயிற்சியின் நிறைவு விழாவில் அசோஷியேசன் தலைவர் ராமச்சந்திரன் நாயர் தலைமை வகித்தார். வெள்ளிமலை விவேகானந்த ஆஸ்ரம சுவாமி சிவாத்மானந்தஜி சித்த மருத்துவர்களுக்கு விருது வழங்கினார். சங்க பொருளாளர் மற்றும், படந்தாலுமூடு அனுக்கிரக சித்த வர்ம வைத்தியசாலை நிறுவனர் சுரேஷ் குமார் ஆசான் சித்த வர்மம் குறித்து பேசினார். தொடர்ந்து அசோஷியேஷன் செயலாளர் ஹரீஷ் வைத்தியர், பேராசிரியர் கணபதி, ராஜேஷ், ராம் ஆசான், ரப்பர் போர்டு துணை செயர்மேன் அனில்குமார் ஓய்வு பெற்ற டி. எஸ். எம் ஓ . ரோபர்ட் சிங், உள்ளிட்டோர் பேசினார்கள். தொடர்ந்து திற்பரப்பு பேரூராட்சி தலைவர் பொன். ரவி ஒருவருட பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். விழாவில் வர்ம கருத்தரங்கம், மூலிகை கண்காட்சி, புத்தக வெளியீடு, களரி விளையாட்டு, நடந்தது. இந்த நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து ஏராளமான மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மருத்துவர் சுரேஷ்குமார் தலைமையில் சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் அருளவாடி, மல்லன்குழி, மாதஹள்ளி, பையண்ணாபுரம், பனகஹள்ளி, கொங்கஹள்ளி, கெட்டவாடி, தொட்டமுதுகரை, எரகனஹள்ளி, திகினாரை, கரளவாடி, தொட்டகாஜனூர், சிக்ககாஜனூர், தாளவாடி, மரூர், இகலூர், நெய்தாளபுரம், தலமலை, ஆசனூர் கிராமங்களுக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்றது.

## தேவதானப்பட்டி மேட்டுவளைவு பகுதியில் அமைந்துள்ள

# 9 சமுதாயங்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ முத்தாலம்மன், ஸ்ரீ காளியம்மன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேக விழா



தேனி, ஜூன் 18

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி மேட்டுவளைவு பகுதியில் அமைந்துள்ள 9 சமுதாயங்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ முத்தாலம்மன், ஸ்ரீ காளியம்மன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேக விழா (17.06.2026) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் வெகுசிறப்பாக நடைபெற்றது. 22 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற்ற இந்த புனித மஹா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, யாகசாலை பூஜைகள், சிறப்பு ஹோமங்கள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்க கலசங்களில் புனித நீர் நிரப்பப்பட்டு, கோவில் விமான கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவில் மேட்டுவளைவு மற்றும் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை மற்றும் அன்னதான நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்த மஹா கும்பாபிஷேக விழா பக்தர்களின் பக்தி பரவசத்துடன் மற்றும் பொதுமக்களின் பெரும் திரளான பங்கேற்புடன் சிறப்பாக நிறைவடைந்தது



# குளச்சல் நகராட்சி ஆணையரிடம் அதிமுகவினர் மனு

குளச்சல் ஜூன் 18

குளச்சல் நகராட்சி ஆணையரை அதிமுக நகர செயலாளர் ஆண்ட்ரோஸ் தலைமையில் அதிமுகவினர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அவர்கள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது :

குளச்சல் ஏ.வி.எம் கால்வாய். மற்றும் வெள்ளியாகுளம் போன்ற நீர் நிலைகளை உடனடியாக தூர்வாரி பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் எனவும், குளச்சல் நகராட்சிக்கு உட்பட்ட வீடுகளுக்கு மாதம் 30 ரூபாய் குடிநீர் வரி அதிகரித்து உள்ளதை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனவும், குளச்சல் நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சாலைகளையும், மின் விளக்குகளையும் சரி செய்ய வேண்டும் எனவும், கொட்டில்பாடு, சுனாமி குடியிருப்புகளில் சாக்கடை நீர் சாலைகளில் தேங்கி நிற்பதால் கொடிய நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்ட உள்ளதையும் உள்ளடக்கிய பல்வேறு கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றி தர வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது

இந்நிகழ்வில் அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆறுமுக ராஜா, முன்னாள் மாணவர் அணி மாவட்ட செயலாளர் ரவீந்திர வர்சன், முன்னாள் செயலாளர் அருள்தாஸ், ராஜ்குமார். பெலிக்ஸ் ராஜன், ஜெகன் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தேனி மாவட்டம் கீர்த்தி சக்ரா” விருது பெற்ற

# இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரம் இல்லத்திற்கு கலெக்டர் நேரில் சென்று பாராட்டினார்



தேனி, ஜூன் 18

தேனி மாவட்டம், காமயகவுண்டன் பட்டியைச் சேர்ந்த இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரம் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் வெளிப்படுத்திய அசாத்திய வீரதீரச் செயலைப் பாராட்டி இந்திய அரசின் “கீர்த்தி சக்ரா" விருது பெற்றதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இராணுவ வீரரின் இல்லத்திற்கு நேரில் சென்று, பொன்னாடை போர்த்தி பூங்கொத்து வழங்கி பாராட்டினார்.

இந்திய இராணுவத்தின் பீரங்கிப் படைப்பிரிவில் பணியாற்றிவரும் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரம் டிசம்பர் 19, 2024 அன்று ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திலுள்ள குல்காம் பகுதியில் நடைபெற்ற பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது, பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் முகம் மற்றும் தோள்பட்டையில் பலத்த காயம் அடைந்த நிலையிலும், தனது கடமையிலிருந்து தவறாமல் தொடர்ந்து போராடி, பயங்கரவாதிகளை வீழ்த்தினார். அவரது அசாத்திய வீர தீரச் செயலைப் பாராட்டி இந்தியாவின் இரண்டாவது உயரிய அமைதிக்கால வீரவிருதான கீர்த்தி சக்ரா விருதினை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கடந்த 08.06.2026 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கிச்சிறப்பித்தார்.

அதனைத்தொடர்ந்து, தேசத்தின் பாதுகாப்பிற்காகத் தனது இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இந்திய இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு அரசின் சார்பில் 48 இலட்சம் ரூபாய்க்கானகாசோலையை15.06.2026 அன்று வழங்கி தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். தேனி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் கீர்த்தி சக்ரா விருது பெற்ற காமயகவுண்டன்பட்டியைச் சேர்ந்த இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரம் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று பொன்னாடை போர்த்தி பூங்கொத்து வழங்கி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சியில், இந்தியன் வங்கி சார்பாக, ரூ.3 கோடியே 92 இலட்சம் மதிப்பில் ஊரக வேலைவாய்ப்புபயிற்சிநிறுவனகட்டிடகட்டுமானபணிகளைமாவட்டஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார். உடன், இந்தியன் வங்கி களப் பொதுமேலாளர் கோயம்புத்தூர் .எம்.செல்வராஜ், இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குநர் .பிரசாந்த் பெங்களூர் இந்திய ஊரக சுய வேலைவாய்ப்பு இயக்குநர் .வெங்கடேசன், திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் .பெரியசாமி, இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் .சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஆதரவற்றோர் இல்லத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கிய ஜீவன் எயிட் டிரஸ்ட்





தென்காசி ஜூன் 18

தென்காசியில் இயங்கி வரும் 'பசியில்லா தமிழகம்' ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோர் இல்லத்திற்குத் தேவையான அவசர மருத்துவ உபகரணங்கள் மை ஜீவன் எயிட் டிரஸ்ட் சார்பாக உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

'மை ஜீவன் எயிட் டிரஸ்ட்' அமைப்பின் நிறுவனர் டாக்டர் ஷிபு ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்காக நிதி உதவி திரட்டினார். இதனைத் தொடர்ந்து, சமூக ஆர்வலர் ஆர்.ஜே. குட்டி பிரகாஷ் அந்த அவசர மருத்துவ உபகரணங்களை தென்காசியில் உள்ள பசியில்லா தமிழகம் இல்லத்திற்குப் அனுப்பி வைத்தார். இல்லத்தில் தங்கியுள்ள ஆதரவற்ற மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் தினசரி பராமரிப்பிற்கும், அவசர மருத்துவத் தேவைகளுக்கும் இந்த உபகரணங்கள் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என இல்ல நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

தென்காசி பகுதியில் உள்ள ஆதரவற்றோரின் நலன் கருதி இந்த மருத்துவ உதவிகளைச் செய்து கொடுத்த மை ஜீவன் எயிட் டிரஸ்ட் நிறுவனர் டாக்டர் ஷிபு மற்றும் ஒருங்கிணைத்து இல்லத்திற்குக் கொண்டு சேர்த்த ஆர்.ஜே.

குட்டி பிரகாஷ் ஆகியோருக்கு பசியில்லாதமிழகம்இல்லத்தின்நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி சமூக ஆர்வலர்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## இரணியல் அருகே

# ஓடும் பஸ்ஸிலிருந்து விழுந்த பெண் உயிரிழப்பு

இரணியல், ஜூன். 18

குளச்சல் பேருந்து நிலையத்திலிருந்து நேற்று காலை அரசு பஸ் ஒன்று நாகர் கோவிலுக்கு புறப்பட்டது. திங்கள் நகர் பேருந்து நிலையம் வழியாக இயக்கப்படும் அந்த பஸ்சை சேர்மங்கலம் பகுதியை சேர்ந்த செல்வராஜ் (45) என்பவர் ஓட்டினார்.

பஸ் காலை 7 மணியளவில் தோட்டிகோடு பேருந்து நிறுத்தத்தில் இருந்து பயணிகளை இறக்கி ஏற்றி கொண்டு புறப்பட்டு சென்றது. அப்போது பெண் ஒருவரும் அந்த பஸ்சில் ஏறினார். சற்று நேரத்தில் வளைவான திருப்பத்தில் பஸ் திரும்பிய போது முன் பக்கம் வாசல் வழியாக அந்த பெண் வெளியே விழுந்தார். இதில் தலையில் காயமடைந்த அவரை குமரி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து இரணியல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்தில் இறந்த பெண் வடசேரியை சேர்ந்த சகுந்தலா (72) என போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. அவர் தோட்டியோடு பகுதிக்கு வந்து விட்டு, வீட்டுக்கு திரும்பி செல்லும் போது இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. விபத்து ஏற்பட காரணமான அரசு பஸ்ஸில் தானியங்கி கதவுகள் இல்லை என்று கூறப்படுகிறது. இதனால் தான் அந்த பெண் ஓடும் பஸ்ஸிலிருந்து வெளியே விழுந்து பரிதாபமாக பலியாகி விட்டார் என பொதுமக்கள் தெரிவித்தனர். அது மட்டுமின்றி காலை நேரத்தில் அந்த தடத்தில் போதிய பஸ்கள் இயக்கப்படாததால், பஸ்களில் பயணிகள் கூட்டம் அதிகமாகவே இருப்பதாகவும், பேருந்து எண்ணிக்கைகள் குறைவாகவே இயக்குவதால் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்ததால் இந்த மாதிரி சம்பவங்கள் அதிகரித்து வருகிறது என்றும், போக்குவரத்து நிர்வாகம் அதிக அளவில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மார்த்தாண்டம் பகுதியில்

# வெவ்வேறு விபத்துக்கள் பெண் உட்பட 4 பேர் படுகாயம்

மார்த்தாண்டம், ஜூன்.18

குமரி கேரளா எல்லை பகுதி பூவார் பகுதியை சேர்ந்தவர் பிரசாத் மனைவி அஞ்சு (28). இவர் காரக்கோணம் தனியார் மருத்துவக் கல்லூரியில் லேப் டெக்னீஷனாக வேலை பார்த்து வருகிறார். இவர் பணிக்கு செல்வதற்காக கண்ணுமாமூடு பகுதியில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.

அப்போது ஜெயச்சந்திரன் என்பவர் ஓட்டி வந்த ஆட்டோ ஒன்று அஞ்சுவின் பைக்கின் மீது மோதியது. இதில் அஞ்சு தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார். அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு காரக்கோணம் தனியார் மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இது குறித்து பளுகல் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது போன்று மார்த்தாண்டம் அருகே நெல்வேலி பகுதியை சேர்ந்தவர் கோபி (45). இவர் இருசக்கர வாகனத்தில் நட்டாலம் பகுதியில் உள்ள 4 வழிச்சாலையில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது குன்னுவிளை பகுதியை சேர்ந்த மெர்லின் (45) என்பவர் ஓட்டி வந்த ஆட்டோ பைக்கில் மோதியது. இதில் கோபி தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார். ஆட்டோ கவிழ்ந்ததில் ஆட்டோவில் பயணம் செய்த பூட்டேற்றியை சேர்ந்த ஜெபா (35) என்பவரும் ஆட்டோ டிரைவர் மெர்லின் ஆகியோரும் பலத்த காயமடைந்தனர். அவர்களை அக்கம்பக்கத்தினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மார்த்தாண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீ குளிக்க முயற்சி



சேலம், ஜூன் 18

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் மாவேலி பாளையம் என்ற கிராமத்தை சேர்ந்த சத்யா என்பவர் தான் விவசாய கூலி வேலை செய்து ஜீவனம் செய்து வருகிறார். அவருக்கு பூதப்பாடி கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் என்பவருடன் திருமணம் ஆகி 12 வருடம் ஆகிறது. அவருக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் அவருடைய கணவர் அவரது மூத்த மகளிடம் பாலியல் ரீதியான துன்புறுத்தலில் ஈடுபட்டதால் சங்ககிரி மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை எண்: 37/2025 பதிவு செய்யப்பட்டு உள்ளது. மேற்படி வழக்கு போக்சோ 2012 பிரிவு 9 (m)(n) 10 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஆறுமுகம் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு கணவரை பிரிந்து தனது மூன்று பெண் குழந்தைகளுடன் தாயார் வீட்டில் வசித்து வருகிறார். மேலும் அவரது கணவருக்கு போதை பழக்கமும், ரவுடிகளின் சகவாசமும் உள்ளது. ஒரு முறை கொலை முயற்சி வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்த நிலையில் மீண்டும் தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சிக்கிறார். மேலும் தனது மூத்த மகள் பள்ளி செல்லும் இடங்களில் சந்தித்து நீதிமன்றத்தில் ஏதாவது அவரைப் பற்றி சொன்னால் மகளை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி வருகிறார். மேலும் அவர் வசிக்கும் வீட்டிற்கு வந்து கற்களை எடுத்து வீட்டின் மீது கல் எரிந்து தனக்கு கொலை மிரட்டல் விடுவதாகவும், மரியாதையாக கேசை வாபஸ் வாங்கு இல்லை என்றால் உன் உடம்பில் தலை இருக்காது என்று மிரட்டுகிறார். இதனால் தன்னால் இயல்பான வாழ்க்கை வாழ முடியவில்லை. அதனால் பல முறை மாவட்ட ஆட்சியர், காவல் ஆணையர் மற்றும் கண்காணிப்பாளர் என அனைவரிடமும் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. ஆகவே மாவட்ட ஆட்சியரை பார்த்து தனது நிலையை விளக்கி இந்த சூழ்நிலையில் இருந்து தனது கணவர் ஆறுமுகம் மீது தக்க நடவடிக்கை எடுத்து அவரது குடும்பத்தை காப்பாற்றுமாறு மனு அளிக்க வந்தார். விசாரணைக்காக அவர்களை காவல் துறையினர் காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேலம், ஜூன் 18

சேலம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வருகிற 19.06.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. சேலம் மாவட்டத்தில் ஜூன் 2026 கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக 2ம் தளத்தில் உள்ள கூட்ட அறை எண்: 215 ல் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் வேளாண்மை சம்பந்தமான தங்கள் குறைகளை நேரிலும் விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

## ஸ்ரீராம் இலக்கியக் கழகம் சார்பில்

# பள்ளி கல்லூரி மாணவர்களுக்கிடையேயான திருக்குறள் பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டி

கோவை,ஜூன்:18

இந்தியாவில் நிதி வர்த்தகத்தில் முன்னணி இடத்தை வகித்து வரும் ஸ்ரீராம் குழும நிறுவனங்களின் ஒரு அங்கமாகிய ஸ்ரீராம் இலக்கியக் கழகம்,வரும் ஜூலை 18 முதல் ஆகஸ்ட் 30 வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவ /மாணவியரிடையே திருக்குறள் பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்த இருக்கிறது.

நடைபெறும் இடங்கள் இப்போட்டிகள்,12 மையங்களில் நடத்தப்படும். கோவையில், ஆகஸ்ட் 2 ராம் நகரில் உள்ள சபர்பன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.கோவை தவிர,ஜூலை 18 சேலத்திலும்,ஜூலை 19 வேலூரிலும், ஜூலை 25 திருவாரூரிலும், ஜூலை 26 புதுச்சேரியிலும்,ஆகஸ்ட் 1 ஈரோட்டிலும்,ஆகஸ்ட் 8 தஞ்சாவூரிலும்,ஆகஸ்ட் 9 திருச்சியிலும், ஆகஸ்ட் 22 மதுரையிலும்,ஆகஸ்ட் 23 நெல்லையிலும்,ஆகஸ்ட் 29 சென்னையிலும்,ஆகஸ்ட் 30 தாம்பரத்திலும்,நடைபெறவுள்ளது.

இடைநிலை (6 8 ஆம் வகுப்புகள்),மேல்நிலை (9 12 ஆம் வகுப்புகள்),கல்லூரி என மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இதில் பங்கு பெற விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.அல்லது www.shriramchits.com என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மாணவ சமுதாயத்தினரிடையே திருக்குறளின் கருத்துகளைப் பரப்பவும்,தமிழாற்றலை வளர்க்கவும்,வரையும் திறனை ஊக்குவிக்கவும் கடந்த 1988ஆம் ஆண்டு முதல் ஸ்ரீராம் இலக்கியக் கழகம் இப்போட்டியினை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



## திருவட்டாறில்
# மகளிர் சுயஉதவிக்குழுக்களின் கைவினைபொருட்கள்: கலெக்டர் பார்வை

நாகர்கோவில், ஜூன்.18

கன்னியாகுமரி மாவட்ட மகளிர் திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவிக்குழுவினர் அரசின் கடனுதவியுடன் சுயத்தொழில் மற்றும் வீட்டிலிருந்தபடியே கைவினைப்பொருட்கள் விற்பனை செய்தல் உள்ளிட்ட தொழிலில் ஈடுப்பட்டு வருகின்றனர். அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

திருவட்டாறு கொல்வேல் பகுதியில் கார்மல் அன்னை சுயஉதவிக்குழுவினர் டாடாமேரி என்பவர் வீட்டில் வாழைநாரில் இருந்து தயாரிக்கப்பட்ட கூடைகள், மேஜை விரிப்புகள், பைகள் , வீட்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் தொப்பிகள் உள்ளிட்டவைகள் நேரில் பார்வையிடப்பட்டது. அவற்றின் தரம் மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்து சுயஉதவிக்குழுவினரிடம் கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து அருவிக்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கிராம ஊராட்சி சேவை மையத்தில் ஸ்டார் மகளிர் சுயஉதவிக்குழுவினர் 15 பேர் இணைந்து இயற்கை மற்றும் செயற்கை பூக்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பூங்கொத்துகள் நேரில் பார்வையிடப்பட்டது. பாரம்பரிய முறையோடு நவீன வடிவமைப்புகளையும் புகுத்தி, வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் பொருட்களைத் தயாரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

குறிப்பாக பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, முற்றிலும் இயற்கையான முறையில் வாழைநாரில் இருந்து தயாரிக்கப்படும் இந்த கைவினைப் பொருட்களுக்கு தற்போதைய சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. இது போன்ற சுயதொழில்கள் மூலம் கிராமப்புறப் பெண்களின் பொருளாதாரம் உயரும். இத்தொழிலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல மாவட்ட நிர்வாகம் என்றும் துணையாக இருக்கும். மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தயாரிக்கும் கைவினைபொருட்களை உலகளவில் சந்தைப்படுத்த திட்ட இயக்குநர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. என கூறினார்.

இந்த ஆய்வில் உதவி ஆட்சியர் (பயிற்சி)மோனிகா, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர், துறை அலுவலர்கள், மகளிர்சுயஉதவிக்குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தருமபுரி மாவட்டத்தில்
# ஜமாபந்தியில் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆட்சியர் உத்தரவு



தருமபுரி ஜூன் 18

தருமபுரி மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 1435 ம் ( 2025 2026) பசலிக்கான ஜமாபந்தி மாவட்ட முழுவதும் உள்ள அனைத்து தாலுகா அலுவலகத்திலும் தொடங்கியது . அதன்படி தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற ஜனாபந்தியில் மாவட்ட ஆட்சியர் சரவணன் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். நல்லம்பள்ளி உள் வட்டத்துக்குட்பட்ட 10 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள்கலந்துகொண்டுமுதியோர்உதவித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, பட்டா மாறுதல் உள்பட மொத்தம் 256 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. ஜமாபந்தியின் தொடர்ச்சியாக நேற்று (புதன்கிழமை) பாளையம் உள்வட்டத்திற்கும், இன்று (வியாழக்கிழமை) இண்டூர் உள்வட்டத்திற்கும் ஜனாபந்தி நடைபெறுகிறது. ஜமாபந்தியில் பெறப்படும் கோரிக்கை மனுக்களை முழுமையாக ஆய்வு செய்து தகுதியுடைய மனுக்கள் மீது உடனடி தீர்வு காண வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

# 5 காசுகள் உயர்வு..! நாமக்கல்லில் தொடர்ந்து அதிகரிக்கும் முட்டை விலை

நாமக்கல், ஜூன் 18

நாமக்கல் மாவட்டத்தில் 1,100க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு சுமார் 4 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம்நாள்ஒன்றுக்குஏறத்தாழ3கோடிமுட்டைகள் உற்பத்திசெய்யப்பட்டுவருகிறது.நாமக்கல்மாவட்டத்தில் கோழி முட்டை கொள்முதல் விலை நேற்றைய நிலவரப்படி 640 காசுகளாக (ரூ.6.40) இருந்து வந்தது. இதற்கிடையே இன்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் அதன் விலையை 5 காசுகள் உயர்த்த நிர்வாகிகள் முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 645 காசுகளாக (ரூ.6.45) அதிகரித்துள்ளது. தேவை அதிகமானதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தரப்பில்கூறப்படுகிறது.நாமக்கல்மண்டலத்தில்முட்டை கொள்முதல் விலை கடந்த 7 நாட்களில் 55 காசுகள் அதிகரித்துள்ளது. வரும் நாட்களிலும் முட்டை விலை அதிகரித்து ரூ.7ஐ தொடும் என பண்ணையாளர்கள் தரப்பில் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

# திருப்பத்தூரில் விவசாயிகள் மாநாடு மற்றும் வருவாய்த் தீர்வாயம் ஜமாபந்தி நிறைவு விழா

### 127 பயனாளிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நலத்திட்டங்களை வழங்கினார்



திருப்பத்தூர்:ஜூன்:18,

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 1435 ஆம் பயிராண்டு 2025 2026 விவசாயிகள் மாநாடு மற்றும் வருவாய்த் தீர்வாயம் நிறைவு விழா நடைப்பெற்றது. இவ்விழாவானது ஆறு நாட்கள் நடைபெற்ற நிலையில் 1065 மனுக்கள் பெறப்பட்டு அவ்வப்போது பரிசோதனை செய்து சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் 127 பயனாளிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் நலத்திட்டங்களை வழங்கினார்.

வீட்டுமனை பட்டா, மாற்றுத்திறனாளிகள் துறை, மருத்துவத்துறை , வேளாண்மைத் துறை, சமூக நலத்துறை, முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட துறைகள் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், வட்டாட்சியர் நவநீதம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயலாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் அனைத்து துறை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

# பெரியகுளம் அருகே 24 ஆண்டுகளாக இயங்கி வந்த பேரூராட்சி கடைகளின் மின் இணைப்பு துண்டிப்பு

### வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் கண்ணீர் மல்க கோரிக்கை!



தேனி, ஜூன் 18

தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியம், தேவதானப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பரமசிவம் கோவில் வீதியில், பேரூராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் 10க்கும் மேற்பட்ட வணிகக் கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடைகளை அப்பகுதியைச் சேர்ந்த ஏழை, எளிய வியாபாரிகள் கடந்த 24 ஆண்டுகளுக்கும் மேலாக ஏலம் எடுத்து, அதற்கான வருட வாடகையையும் பேரூராட்சி நிர்வாகத்திற்கு முறையாகச் செலுத்தித் தங்களது வாழ்வாதாரத்தைக் கவனித்து வருகின்றனர்.

இந்நிலையில், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி திடீரென இக்கடைகளுக்கான மின்சார வயர்கள் (EB Lines) துண்டிக்கப்பட்டு, அறுத்தெறியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் கடைகளை நடத்த முடியாமல் அன்றாடப் பிழைப்பிற்கே வழியின்றி தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் முடங்கிப் போயுள்ளதாகப் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

வியாபாரிகளின் கண்ணீர் பேட்டி

இதுகுறித்து பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் கண்ணீர் மல்கத் தெரிவிக்கையில், "நாங்கள் கடந்த 24 வருடங்களாக எவ்வித வாடகை பாக்கியும் இன்றி, அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையை முறையாகச் செலுத்தி வருகிறோம். தற்போதைய நீர்நிலை ஆக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தில் எத்தனையோ நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த சிறிய நீர்நிலை மட்டுமே நிரம்பி ஊரை அழிக்கப் போகிறதா? திடீரென மின் இணைப்பைத் துண்டித்து எங்களை வெளியேற்ற நினைப்பதால், எங்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. நடப்புக் கல்வி ஆண்டில் தங்களது பிள்ளைகளை எப்படிப் பள்ளியில் சேர்ப்பது, அவர்களுக்கான பள்ளி உறைவிடக் கட்டணங்களை (School Fees) எவ்வாறு செலுத்துவது என்று தெரியாமல் தவித்து வருகிறோம். பிள்ளைகளின் எதிர்காலமே இருண்டுவிடும் சூழல் உருவாகியுள்ளது" எனத் தங்களது குமுறல்களை முன்வைத்தனர்.

ஆட்சியருக்குக் கோரிக்கை

தேனி மாவட்டத்தில் பல்வேறு அதிரடி ஆய்வுகளை மேற்கொண்டு, பொதுமக்களின் குறைகளுக்குத் உடனுக்குடன் தீர்வு கண்டு வரும் மாவட்ட ஆட்சியர் அவர்கள், இந்த விவகாரத்திலும் நேரடியாகத் தலையிட வேண்டும். 24 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வரும் தங்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் நசுக்காமல், துறை சார்ந்த அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பித்து தங்களது வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மாவட்ட நிர்வாகத்திற்கு அவசரக் கோரிக்கை விடுத்துள்ளனர்

## தருமபுரியில் பாரத வெண்புறா இயக்கம் நாட்டுப்புற கலைஞர்களின் சார்பில்
# போதை பழக்க வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்வு நடன நிகழ்ச்சி



தருமபுரி ஜூன் 18

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் தருமபுரி மாவட்ட அனைத்து நாட்டுப்புற கலைஞர்களின் போதை பழக்க வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்வு நடன நிகழ்ச்சிக்கு கலைநன்மணி ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

இந்தவிழிப்புணர்வுநிகழ்ச்சியில்கஞ்சா, போதை ஊசிகள், போதை மாத்திரைகள், கள்ளச்சாராயம் உட்பட பல்வேறு போதை பொருட்களை பயன்படுத்தி தனிமனித ஒழுக்க கேட்டால் குடும்ப வன்முறை, ஊர் வன்முறை பொது அமைதிக்கு பங்கம் பெண் குழந்தைகள் வளர இளம் பெண்கள் முதியவர்கள் உள்ளிட்ட பல பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தல் சட்டம் ஒழுங்கு சீர்கேடு கொலை கொள்ளை ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் மீது எதிர்வரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் மிகக் கடுமையான சட்ட திருத்தங்களை செய்ய வேண்டும்.

மேல் முறையீடு இல்லாத அதிகபட்ச தண்டனையை வழங்க வலியுறுத்தி தருமபுரி மாவட்ட அனைத்து நாட்டுப்புற கலைஞர்கள் பல்வேறு வேடம் அணிந்து நடனமாடியும், பாட்டுப்பாடியும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் கலைமாமணி கதிர்வேலு நிறுவனர் பாரத வெண்புற இயக்கம் முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அனைத்து நாட்டுப்புற கலைஞர்கள் கலந்து கொண்டனர்.



# புதிய வகை பலாக்கன்றுகளை நடவு செய்து பயன்பெற விவசாயிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்

நாகர்கோவில், ஜூன்.18

கன்னியாகுமரி மாவட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மை துறையின் சார்பில் நடைபெற்று வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு. பிரதாப் நேற்று 17ம் தேதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

கன்னியாகுமரி பழத்தோட்டம், பேச்சிப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் 40க்கும் மேற்பட்ட வாழைப்பழ இரகங்கள், பல்வேறு வகை கொண்ட மாம்பழங்கள், அன்னாசிபழம், பலாப்பழம் உள்ளிட்ட பல்வேறு பழ வகைகளை நடவு செய்து, விவசாயிகளுக்கு வழங்கி பயன்பெற்று வருகிறார்கள். அதனடிப்படையில் பேச்சிப்பாறை மணலோடைக்கு இடைப்பட்ட அன்புநகர் பகுதியில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் செயல்பட்டு வரும் தேனீ மகத்துவ மையம் 2025ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் மார்த்தாண்டம் தேன் புவிசார் குறியீடு பெற்றுள்ளது. குறிப்பாக தேன் மருத்துவ குணங்கள் நிறைந்தது.

தற்போது தூத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த 25 விவசாயிகளுக்கு 5 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதில் தேனீக்கள் வளர்த்தல், தேன் தயாரித்தல், பதப்படுத்துதல் குறித்த பயிற்சி வகுப்பு நடைபெறுவதையும், தேன் வகைகளை தரம் பிரிப்பது குறித்து நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் கட்டுப்பாட்டில் குலசேகரம் பகுதியில் செயல்பட்டு வரும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் ரப்பர் உற்பத்தி நிறுவனம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து திருவட்டார் புத்தன்கடை பகுதியில் விவசாயிகள் தாய்லாந்து மற்றும் வியட்நாம் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலா மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டிருப்பதை நேரில் பார்வையிடப்பட்டது. வியட்நாம் பழங்கன்றுகள் 16 மாதத்தில் காய்க்கும் தன்மை வாய்ந்ததோடு, மிகவும் சுவையாகவும் இருக்கும். இது போன்று தாய்லாந்லிருந்து இறக்குமதி செய்பட்ட பலா மரக்கன்றுகள் ஆரஞ்சு மற்றும்சிவப்புநிறத்தில்சுவையுடையது. தற்போது மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 3 ஹெக்டர் அளவில் இக்கன்றுகள் நடவு செய்யப்பட்டள்ளது. எனவே விவசாயிகள் இது போன்று அதிக இலாபம் பெறக்கூடிய பழவகைகள் மற்றும் காய்கறிகளை நடவு செய்து வாழ்வாதாரத்தை உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன். என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் இணை இயக்குநர் வேளாண்மை வாணி, தோட்டக்கலை துணை இயக்குனர் நக்கீரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை கீதா, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் துணை தோட்டக்கலை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




# கோவை மாநகராட்சியில் மாமன்ற சாதாரணக் கூட்டம்

கோவை ஜூன்:18

கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாமன்ற சாதாரணக் கூட்டம் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில்,மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா முன்னிலையில் நடைபெற்றது.

உடன் துணை மேயர் ரா.வெற்றிசெல்வன்,துணை ஆணையாளர்கள் த.குமரேசன்,ர.சரஸ்வதி,மாநகர தலைமைப் பொறியாளர் விஜயகுமார்,மண்டல குழுத்தலைவர்கள்வே.கதிர்வேல்,இலக்குமி இளஞ்செல்விகார்த்திக்,ர.தனலட்சுமி கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை, மீனாலோகு,நிலைக்குழுத்தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ,மாலதி நாகராஜ்,பெ.மாரிசெல்வன் (பொது சுகாதாரம்),வி.பி.முபசீராசாந்தி முருகன்சோமு (எ) சந்தோஷ் சா.குமார ராஜபாண்டியன் நிலைக்குழு உறுப்பினர்கள்,மாமன்ற உறுப்பினர்கள்,மண்டல உதவி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# கமுதி கடலாடி தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி
### நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்



கமுதி ஜூன்18

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மற்றும் கடலாடி தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி நடைபெத்றது. பொது மக்கள் கொடுத்த கோரிக்கை மனுக்கள் மீது உடனடி தீர்வு வழங்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். கமுதி தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சிக்கு மாவட்ட வழங்கல் அலுவலர் ரமேஷ் தலைமை வகித்தார். கமுதி தாசில்தார் முருகேஷ் மற்றும் நேர்முக உதவியாளர் தாசில்தார் சடையாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர் பொது மக்களின் மனுக்கள் மீது உடனடி விசாரனை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டன கடலாடி தாலுகா அலுவலகத்தில் மாவட்ட வருவாய் துறைதுணை இயக்குனர் சுல்த்தான் தலைமையில் ஜமாபந்தி நடைபெற்றது. கடலாடி தாசில்தார் பரமசிவம் முன்னிலை வகித்தார். தலைமை துணை தாசில்தார் ரேணுகா தேவி அனைவரையும் வரவேற்றார். பொது மக்களின் மனுக்கள் மீது உரிய விசாரனை செய்து உடனடி தீர்வு காணப்பட்டன.

பிரச்சனைக்குரிய மனுக்கள் மீது சம்பவ இடத்தினை நேர்டை யாக பார்வையிட்டு தீர்வு காண முடிவு செய்யப்பட்டன. கிராம நிர்வாக அலுவலர்கள் பிர்காவாரியாகதங்களது கணக்குகளை காண்பித்து அதிகாரியிடம் பாராட்டைப் பெற்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.